[7th August 1963

போது திருவள்ளுவர் பெருந்தகைக்குச் சிலை வைக்க வேண்டு மென்ற எண்ணம் ஏன் இல்லை ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திருவள்ளுவருடைய பழமை யான சிலை திருமலையில் இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து அந்தக் கோயிலுக்குப் போய்வரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய பாசன மின்சார போர்டு.

* 38 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் உதகையில் கூடிய மத்திய பாசன மின்சார போர்டின் கூட்டத்தில் நமது ராஜ்ஜியத்தின் சார்பில் யார் யார் கலந்துகொண்டார்கள் ?

(இ) அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா: (அ) — (இ) இந்த விஷயங் குறித்து அறிக்கை ஒன்று சபையின் முன்பு வைக்கப் பட்டுள்ளது.

(*a*) & (*b*) A statement[a] on the subject is placed on the Table of the House.

திரு. ஆ. கு. சுப்பையா: மத்திய மின்சார போர்டு கூடி சுமார் எட்டு மாத காலமாகிறது. அமைச்சர் அவர்களுடைய பதிலில், மின்சார போர்டின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறியிருக்கிறார்கள். விரைவில் அந்த முடிவு கிடைக்குமா ? அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அவர்கள் நான் கொடுத்த அறிக்கையை முழுக்கப் படித்துப் பார்த்தால் தெரியும். இது சென்னை ராஜ்யத்தை மட்டும் பொறுத்த விஷய மல்ல. அகில இந்திய ரீதியில் எல்லா எஞ்சினியர்களும் உதக மண்டலத்தில் கூடினார்கள். நமது மாநிலத்திலிருந்தும் பிரதி நிதிகள் போனார்கள். அங்கே பேசப்பட்ட ஒவ்வொரு விஷயமும் அகில இந்திய அடிப்படையைக் கொண்டது. தனிப்பட்ட முறை யில் சென்னை ராஜ்யத்திற்கோ, மின்சார போர்டுக்கோ விசேஷ மான பங்கு ஒன்றும் கிடையாது. அந்த மாநாடு அகில இந்திய ரீதியில் நடத்தப்பட்டது. அவர்கள் அறிக்கை கொடுத்து நமது அரசாங்கத்துக்கு வந்த பிறகு அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

Subsidy for purchase of tools (Scheduled Castes)

* 39 *Q.*—**Sri R. S. VEERAPPA CHETTIAR:** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

---

[a] Printed as Appendix I on pages 244–246 infra.